பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1710)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 20 திங்கட்கிழமை 02-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 104

## ★ கோஷ்டி மோதலின் எதிரொலி
# குருநாகலில் குண்டுவெடிப்பு
# 12பேர் பலி; 150பேர் காயம்

### பொலிஸார் திடீர் விசாரணை

(நமது நிருபர்)

**குருநாகல் மாளிகாபிட்டி என்னும் இடத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் ஒன்றின்போது 12பேர் கொல்லப் பட்டதுடன், 150க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில்15பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக குருநாகல் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

**இந்திய இசைக்கலைஞர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சியின் போது இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலை அடுத்து இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.**

ஊடகவியலாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சியில் இரு ,கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட கருத்து மோதல்களை அடுத்து இக் குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஸ்தலத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டதுடன் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டபின்9பேர் இறந்துள்ளனர் படுகாயம

→ 8ஆம் பக்கம் பார்க்க

### வேவு விமானம் நோட்டம்

யாழ்குடாநாட்டின் கரை ஓரப்பகுதிகள் 'பலாலிவிமான நிலையப்பகுதி மற்றும்குடியிருப்புப்பகுதிகள் உள்ளடக்கி விமானப்படைக்குச் சொந்தமான வேவுவிமானம் ஒன்று நேற்றும் நேற்றுமுன் தினமும் நோட்டமிட்டது.

நேற்றும்,நேற்றுமுன்தினமும்காலை 11மணிவரை இந்தவிமானம் பலமணிநேரம நோட்டமிட்டது.கடந்த ஆறுவருடங்களின்பின் வேவு விமானம் யாழ்குடாநாட்டை வலம் சென்றுள்ளதை மக்கள் அவதானித்துள்ளனர். (ம)

## முல்லையில்மூழ்கியடோறா தளபதியிடம் விளக்கம்!

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் வலிந்த தாக்குதலின் போது தமிழீழ விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட கடற்படையினரின் இரண்டு டோறாப் படகு சம்மந்தமான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கடற்படைத் தளபதி தயா சந்தகிரியிடம் கேட்டுள்ளார்.

கடற்படையினரின் இரு டோறாப்படகுகளும் தாக்கி அழிக்கப்பட்டமைக்கு கடற்படையினரின் பலவீனமா காரணமென்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கடற்படைத் தளபதிடம் கேட்டுள்ளார். [வ

## விமானப்படைக்கு ஆறு நவீனரக பயிற்சி விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

விமானப்படைக்கு ஆறு நவீன பயிற்சி விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சீனத்தயாரிப்பான கே-8 ரக பயிற்சி விமானங்கள் போர் விமானம் ஓட்டும் விமானிகளைப் பயிற்றுவிப்பதற்குப் பயன்படுமெனவிமானப் படை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது:

இவற்றைப் பொருத்தும் பணியை மேற்கொள்ள சீனாவிலிருந்து அடுத்த வாரம் தொழில்நுட்பக்குழுவொன்று கொழும்பு வரவுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டின் தொடக்கத்தில் பத்து பி. ரி 6 ரக பயிற்சி விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

### இலங்கைக்கு
## ஆயுதம் வழங்குவதை நோர்வே நிறுத்தியது

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணை ஏற்பாட்டாளராக செயற்படத் தொடங்கியதில் இருந்து இலங்கைக்கு ஆயுதம்,மற்றும் இராணுவத் தளபாடங்கள் வழங்குவதை நோர்வேஅரசு நிறுத்தியுள்ளது

இதனால் நோர்வேயின் கம்பனிகளிலிருந்து ஆயுதங்களை வாங்கி இலங்கைக்கு வழங்கும் உள்ளூர் ஆயுதமுகவர்கள் பெரிதும்பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## யாழ் மாநகர சுகாதார ஊழியர்களின் ஊர்வலம், உண்ணாவிரதம் திட்டமிட்டபடி

### நாச்சிமார் கோவிலிலிருந்து ஆரம்பமாகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபையினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட சுகாதாரப் பகுதி ஊழியர்களின் ஊர்வலமும் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டமும் இன்று நடைபெறவுள்ளது.

வண்ணை நாச்சிமார் கோயிலடியிலிருந்து இன்று காலை ஆரம்பமாகும் ஊர்வலம் கே. கே. எஸ். வீதிவழியாக மனோகராச் சந்தியை வந்தடைந்து நாவலர் வீதி பலாலிவீதி ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி வழியாகச் சென்று ஈ. பி. டி. பி. தலைமைக்காரியாலயத்தில் மகஜர் கையளிக்கப்படும்.

தொடர்ந்து ஊர்வலம் கஸ்தூரியார் வீதிவழியாக நகரமையத்தையடைந்து மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதியிடம் மகஜர் கையளிக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து பிர

→ 8ஆம் பக்கம் பார்க்க

### ஆணையாளர் யாழ்வருவார்

[(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் வடக்குக்கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான வே.பொ.பாலசிங்கம் இன்று யாழ்ப்பாணம் வருவார். (ந)

## 36ஊழியர்களின் வேலை நீக்கம சாதாரணமான விடயமல்ல!

### ஈ. பி. டி. பி மணிபல்லவராஜன் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின்சுகாதாரப்பகுதி ஊழியர்கள் 36 பேரை பதவி நீக்கம் செய்வதென்பது சாதாரண விடயமல்ல:

ஓர் நிர்வாகத்திற்குள் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர விசாரித்து சுமூகமாக தீர்த்து வைத்துநிர்வாகத்தைஒழுங்காக கொண்டு நடத்துபவரையே சிறந்தநிர்வாகியென மக்கள் கருதுவர்.

அதனை விடுத்து பதவிநீக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பதில் ஆணையாளரின் கண்டிப்பான உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இன்றுயாழ்மாநசரசபைக்கு கடமைக்கு வரும்சகல உத்தியோகத்தர்களையும் வெளியில்செல்ல அனுமதிக்க வேண்டாமென்று பதில் ஆணையாளர் இராசாதணிகாசலம் ஒப்பமிட்டு கண்டிப்பானஉத்தரவுக் கடிதமொன்றை மாநகரசபையின்பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு நேற்றுமாலைவழங்கியுள்ளார்.

இராசா தணிகாசலத்தினால் பிரதமபாதுகாப்பு உத்தியோகத்தருக்கு விலாசமிட்டுவழங்கப்பட்டுள்ளகடிதத்தில்இன்று திங்கட்கிழமை காலையில் வரும்சகல உத்தியோகத்தர்கள்,தொழிலாளர்கள் வாகனங்களை காலை6 மணிக்கு காரியாலயவளவினுள் அனுமதித்து எவரையும் வேலைக்கு,வெளியில் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்றும் அக்கடிதத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6 மணிக்கு பதில் ஆணையாளரினால் பிரதமபாதுகாப்புஉத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்ட இக்கடிதம் தொடர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நியாயமான கோரிக்கைகளுக்கு எமது ஆதரவு என்றும் உண்டு

### பெனடிக் தனபாலசிங்கம் கடிதம்

(கொழும்பு)

தங்களின் கோரிக்கைகளுக்கும், போராட்டத்திற்கும் நாங்கள் தடையானவர்களல்ல, தங்களின் போராட்டம் சரியானதெனில் எங்களுடைய ஆதரவு என்றும் உண்டு; இவ்வாறு புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பெனடிக் தனபாலசிங்கம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### ENGLISH CLASSES

தரம் 1 - O/L, A/L, G.A.Q, B.A. வரை பாடத்திட்டத்திற்கு அமைய இலகு முறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது O/L 2001 துரித மீட்டல் பயிற்சி, A/L. 2002-2003 வகுப்புகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையினரே சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆரம்பம் 07.04.2001. M.P. ஷண் ஆசிரியர், பலாலி வீதி, தேவாலய முன் ஒழுங்கை உரும்பிராய்.

[2679]


## நிர்வாகிகள் தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்ற போது,

இச்சமாசத்தின் தலைவராக க. பரத்துவாசன், உபதலைவராக த. மணிவண்ணன், செயலாளராக திருமதி யே. அமலோற்பவம், உபசெயலாளராக செல்வி மு. குணாளினி பொருளாளராக க. நாகலிங்கம் ஆகியோர் உட்பட 15 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 30 இற்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (உ-75)

## கூட்டம்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகத்தர்களுக்கான கூட்டமொன்று இன்று தேசிய இளைஞர் சேவைகள மன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் தங்கள் பிரதேச கழக செயற்பாடுகள் குறித்தும் மேலும் பல செயற்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-59)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகிறது:

### சங்கானை

| | |
|---|---|
| 182106 ஏ | 183515 ஏ |
| 183516 ஏ | 183517 பி |
| 184972 ஏ | 186733 ஏ |
| 186733 பி | 186733 சி |
| 186733 டி | 186747 ஏ |
| 186747 பி | 186833 ஏ |
| 187025 ஏ | 187025 பி |
| 187025 சி | 187193 ஏ |
| 187193 பி | 187211 ஏ |
| 187222 ஏ | 187222 பி |
| 183517 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 185027 ஏ | 185224 ஏ |
| 185224 பி | 185734 ஏ |
| 186777 ஏ | 186849 ஏ |
| 186849 பி | 186928 ஏ |
| 186928 பி | 187137 ஏ |
| 187137 பி | 187155 ஏ |
| 187217 ஏ | 187217 பி |
| 187217 சி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 128506 ஏ | 186741 ஏ |
| 186842 ஏ | 186842 பி |
| 186842 சி | 186843 ஏ |
| 187029 ஏ | 187040 ஏ |
| 187104 ஏ | 187162 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 169428 ஏ | 169428 பி |
| 169428 சி | 169428 டி |
| 183206 ஏ | 183206 பி |
| 184910 ஏ | 186731 ஏ |
| 186731 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 175897 ஏ | 180322 ஏ |
| 180322 பி | 180323 ஏ |
| 180328 ஏ | 180329 ஏ |
| 180329 பி | 181652 ஏ |
| 181652 பி | 181652 சி |
| 183270 ஏ | 183270 பி |
| 183466 ஏ | 183466 பி |
| 185058 ஏ | 187113 ஏ |
| 188767 ஏ | 188767 பி |
| 188767 சி | |

மார்ச் மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக அனுப்பப்பட்டுள்ளது;

### சங்கானை

| | |
|---|---|
| 179462 ஏ | 179462 பி |
| 179463 ஏ | 150181 ஏ |
| 185225 ஏ | 185226 ஏ |
| 185299 ஏ | 185299 பி |
| 186814 ஏ | 186817 ஏ |
| 186872 ஏ | 186872 பி |
| 186875 ஏ | 186875 பி |
| 186875 சி | 186875 டி |
| 186875 ஈ | 186920 ஏ |
| 186920 பி | 186921 ஏ |
| 186921 பி | 186966 ஏ |
| 186966 பி | 187010 ஏ |
| 187011 ஏ | 187011 பி |
| 187131 ஏ | 187131 பி |
| 187152 ஏ | 187152 பி |
| 187191 ஏ | 187191 பி |
| 188609 ஏ | 188640 ஏ |
| 188640 பி | 188664 ஏ |
| 188664 பி | 188664 சி |
| 188699 ஏ | 188703 ஏ |
| 188768 ஏ | 188782 ஏ |
| 189530 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 180686 ஏ | 180686 பி |
| 186386 ஏ | 186386 பி |
| 186674 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 181447 ஏ | 181447 பி |
| 183231 ஏ | 183317 ஏ |
| 183317 பி | 186743 ஏ |
| 186743 பி | 186761 ஏ |
| 186765 ஏ | 186870 ஏ |
| 186874 ஏ | 186874 பி |
| 186876 சி | 176874 டி |
| 186895 ஏ | 188627 ஏ |
| 188627 பி | 178700 ஏ |
| 188742 ஏ | 188742 பி |
| 189305 ஏ | 189305 பி |
| 189306 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 184997 ஏ | 184998 ஏ |
| 185098 ஏ | 186266 ஏ |
| 185267 ஏ | 165267 பி |
| 185294 ஏ | 186751 ஏ |
| 186751 பி | 186771 ஏ |
| 186774 ஏ | 186864 ஏ |
| 186886 ஏ | 186963 ஏ |
| 186963 பி | 186963 சி |
| 187178 ஏ | 188623 ஏ |
| 188647 ஏ | 188647 பி |
| 188647 சி | 188651 ஏ |
| 188685 ஏ | 188688 ஏ |
| 188688 ஏ | 188688 பி |
| 188704 ஏ | 188704 பி |
| 188704 சி | 188763 ஏ |
| 188760 ஏ | 188762 ஏ |
| 188781 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 182801 ஏ | 183096 ஏ |
| 183096 பி | 183096 சி |
| 184974 ஏ | 184974 பி |
| 184974 சி | 186899 ஏ |
| 186899 பி | 187158 ஏ |
| 187158 பி | 187713 ஏ |
| 187713 பி | 187713 சி |
| 188617 ஏ | 188617 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 187920 ஏ | 179500 ஏ |
| 179500 பி | 179500 சி |
| 181406 ஏ | 185242 ஏ |
| 186788 ஏ | 186788 பி |
| 186788 சி | 186836 ஏ |
| 186836 பி | 186913 ஏ |
| 186913 பி | 188601 ஏ |
| 188601 பி | 188601 பி |
| 188613 ஏ | 188687 ஏ |
| 188687 பி | 189301 ஏ |
| 189482 ஏ | |

## 36 ஊழியர் --

(8ஆம் பக்கத் தொடர்ச்)

தாவது,

யாழ்ப்பாணத்துமண்ணில் இடம்பெற்ற யுத்த நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் மத்தியிலும் மாநகரசபைப் பகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று குடும்பநல சேவையாளர்கள் வழங்கிய சுகாதார சேவையைமக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

தாய் சேய்நலன் சிகிச்சை நிலையம், தடை மருந்தேற்றல், தொண்டர்பயிற்சி, போசாக்குத்திட்டம், சுகாதாரக் கருத்தரங்குகள், எனபலவகையாலும் யாழ்மாநகரமக்களின் சுகநலனுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய குடும்பநலஉதவியாளர்களை எதுவித நியாயமுமின்றி, ஏதேச்சதிகாரமாக வேலை நீக்கம் செய்தமை சர்வாதிகாரத்தின் ஓர்வெளிப்பாடே யாகும்.

கடந்த எட்டுவருடங்களாக மிகக்குறைந்த வேதனத்துடன் சேவையாற்றிய குடும்பநல உதவியாளர்களுக்கு தேவையான சீருடைகளைவழங்காதது டன் துவிச்சக்கரவண்டி பயணப் படியையும் நிறுத்தி அவர்களின் சேவைக்கு ஊறு விளைவிக்கப்பட்டது.

இதனால் சுகாதார ஊழியர்கள் தமது பிரச்சினையை வெளிப்படுத்த கடமை பாதிக்காதவகையில் கறுப்புப்பட்டிப் போராட்டம் நடத்தினர் ஒரு ஜனநாயகநாட்டில்தனியொரு மனிதருக்கு இருக்கக் கூடிய மிகக்குறைந்த சுதந்திரமாகவே இக் கறுப்புப் பட்டிப் போராட்டம் நடந்துள்ளது. இந்நிலையில்மாநகரசபை நிர்வாகம் சாத்வீகமானகறுப்புப் பட்டிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பழிவாங்கும் நோக்கில் செயற் பட்டதேயொழிய அவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகாண முற்படவில்லை. கடந்த எட்டுவருடங்களாக தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றியவர்களை நிரந்தரம் ஆக்கும் நடவடிக்கையில் ஈடுபடாமல், அவர்களை மாநகர நிர்வாகம் பதவி நீக்கம் செய்து சடிதம் அனுப்பியது.

எந்தவொரு அரச அமைப்புகளுக்கும் சட்ட விதிகள் உண்டு. அச்சட்ட விதிகளை மீறி 36 சுகாதார ஊழியர்களை வேலை நீக்கம் செய்தமையை தட்டிக்கேட்க மக்கள் சமூகம்இப்போது திரண்டுவிட்டது. சமூகமானமுறையில்ஓர் எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டிய சபையின் பிரச்சினைகள் இன்று ஊர்வலம், உண்ணாவிரதம் என்ற அளவிற்கு செல்வதற்கு முழுக்காரணமும் யாழ் மாநகரசபைநிர்வாகத்தின் பொறுப்பற்ற, பொறுமையற்ற செயலென்பதை மக்கள்புரிந்துகொள்வர்

36 ஊழியர்களை வேலை நீக்கம்செய்ததைமனிதநேயம் மிக்க எவரும் சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். நிரந்தர ஊழியர் ஒருவரை வேலை நீக்கம் செய்வதென்றால் அதற்கு எத்தனையோ சட்ட விதிமுறைகள் உண்டு.

அதனைவிடுத்து எழுந்தமானமாக வேலைநீக்க கடிதங்களை அனுப்புவதும், பொறுப்பற்றமுறையில் சிகிச்சைநிலையங்களை பூட்டிவைப்பதும் மாநகரசபையின் மக்கள் சேவையாகஇருக்கமுடியாது

இந்நிலையிலே பாதிக்கப்பட்டசுகாதாரசேவையாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிகேட்க மக்கள் சமூகம் முன்வர வேண்டும். இதன் ஒருவெளிப்பாடே இன்று நடைபெறுகின்றஊர்வலமும், உண்ணாவிரதப்போராட்டமுமாக இருக்கமுடியுமெனநான்கருதுகிறேன். இவ்வாறுஅவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## பதவி வெற்றிடங்கள்

1) ஜவுளி வியாபாரத்தில் அனுபவமும் கணக்கு எழுதத் தெரிந்தவர்களும் வியாபார ஸ்தாபனத்தை நிர்வகிப் பதிலும் அனுபவம் வாய்ந்தவர்கள்.

2) சிறுவர், சிறுமியரின் ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களும் ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள்.

3) டெலிபோன், FAX, PHOTO COPY MACHINE இயக்குவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 08-04-2001

விண்ணப்ப முகவரி

விளம்பர இல- 110,
மே/பா வலம்புரி,
இல 15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

(கி-1719)

# மாபெரும் மலிவு விற்பனை

யாழ். குடாநாட்டு மக்கள் புதுவருடத்தை குதூகலமாகக் கொண்டாடும் முகமாக சிறப்பு விற்பனை

## ★ மெக்ஸ் புடவை மாளிகை ★

70, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் 34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(149) 91 கஸ்தூரியார் வீதி, (முன்னாள் ஹோட்டல் பரடைஸ்) யாழ்ப்பாணம்

**01-04-2001 இல் இருந்து 13-04-2001 வரை**

சாறிகள், சூட்டிங், சேட்டிங், றெடிமேட் ஆடைகள், சிறுவர், சிறுமியரின் துணிவகைகள், ஆடைகள் இன்னும் பலவித ஜவுளிகள்

**மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்!**

(கி-1718)

# நாகர் கோவில் பகுதியில் மண் ஏற்ற விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்

## நடை முறைகளில் இறுக்கம்

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பகுதியில் மண் ஏற்றுவதற்கு விதிக்கப்பட்ட தடை, சில நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளது.

நாகர் கோவில் பகுதியில் இடம் பெற்ற தங்குதடையற்ற மண் அகழ்வு காரணமாக, அப்பகுதியில் எதிர்நோக்கப்பட்ட சூழலியல் பாதக விளைவுகளைகருத்தில் கொண்டு நகர் கோவிலில் இருந்து மண் ஏற்ற வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபரினால் தடை விதிக்கப்பட்டது.

இதனால் யாழ்.மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடப் பணிகள் இடை நிறுத்தப்பட்டதுடன், பொது மக்களும்பல சிரமங்களை எதிர் கொண்டனர்.

இந்நிலையைகருத்தில்எடுத்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி அமைப்பாளரும், நல்லூர்பிரதேச சபைத் தலைவருமான கே.மணிபல்லவராஜன்(நிஷாந்தன்) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன்பேரில் இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ் அனுமதியின் பிரகாரம் மணல் ஏற்றசிலவழிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அவ் விதிமுறைகளின் படி மணல் ஏற்ற வேண்டும் எனவும்,

அரச கட்டடங்கள்திணைக்களங்கள் மற்றும் புனரமைப்பு அமைச்சினால்அமைக்கப்படும் கட்டடங்களுக்குத் தேவையான மணலை அந்தந்தஉதவி அரசாங்க அதிபரிடம்அனுமதி பெற்ற பின்னரும்,

பொதுமக்களுக்குத் தேவைப் படுமாயின் அவர்களின் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேச சபையின் அனுமதி பெற்ற பின்னரும் மண்ஏற்ற அனுமதிக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## யாழ் பிரதேச செயலக அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் விளையாட்டுவிழாவின் . உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கடந்த 28 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

இவ் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகஅணி வெற்றியீட்டியுள்ளது.

சிறந்த வீரனாக யாழ். பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ம. சில்வஸ்ரார் தெரிவுசெய்யப்பட்டார்.

(உ-10)

## மூடப்பட்ட நிலையில் 73பாடசாலைகள்

### கல்விப் பணிப்பாளர் விசனம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்று வரும் கொடிய போர் காரணமாக அப்பகுதிகளில் உள்ள 73 பாடசாலைகள் முற்றாக மூடப்பட்ட நிலையில் உள்ளன.

இவ்வாறு திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் 27ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் உரையாற்றும் போது வடக்கு- கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் நூற்றுக் கணக்கான பாடசாலைகள் நிரந்தரக் கட்டடங்கள் எதுவும் இன்றித் தற்போது தோட்டக் காணிகளிலேயே இயங்கி வருகின்றன.

இந் நிலையில் ஆசிரிய சமூகத்தினர் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க முன்வர வேண்டுமென்று அவர் தனது உரையில் மேலும்தெரிவித்துள்ளார். (க-4)

## இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனியன்று யாழ். நகரப்பகுதியில் ஏற்பட்ட வெவ்வேறு விபத்துச் சம்பவங்களின்போது இருவர் காயமடைந்துள்ளனர்.

யாழ். வைத்தியசாலை வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த மரியநாயகம் கார்த்திகேசன் (வயது 16) என்ற சிறுவன் காயமடைந்தும்,

குளப்பிட்டியில் ஏற்பட்ட லான்மாஸ்ரர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார்சைக்கிள் சாரதியான சங்கானையைச்சேர்ந்த கந்தசாமி கிருஷ்ணராஜா (வயது 31) என்பவர் தலையில் காயமடைந்தும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உ-2-6

## இளைஞர் சேவை அதிகாரி நேர்முக தேர்வுக்கு தோற்றுவோர் விபரம் பார்வைக்கு

[ஊர்காவற்றுறை]

யாழ். மாவட்டத்தில் இருந்து இளைஞர் சேவை அதிகாரி பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பட்டதாரிகளிடம் இவ் இளைஞர் சேவை அதிகாரிக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

கடந்த தைமாதம் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்தவர்களுக்குமட்டுமே நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இளைஞர் சேவை அதிகாரி வெற்றிடம் நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தகுதியுள்ளவர்களின் பெயர்விபரத்தினைதேசியஇளைஞர்சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தில்உறுதிப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வெற்றிடத்திற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து பெருமளவிலான பட்டதாரிகள் விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-75]

## அ.இ.திருமுறை மன்ற நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் 25 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மு. ப 10 மணிக்கு மன்றச் செயற்பாட்டு அலுவலகமான யாழ்ப்பாணம்கச்சேரி நல்லூர் வீதி, ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் மன்றத் தலைவர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பண்டிதர் வ. பேரின்பநாயகம் மீண்டும் தலைவராகவும், சைவப்புலவர் சு. செல்வத்துரை உபதலைவராகவும், வ. தெய்வேந்திரன் செயளாலராகவும், ப. பாலசுபிரமணியம் உபசெயலாளராகவும்; பா. பத்மநாதன் பொருளாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். சி. கிருஷ்ணமூர்த்தி, அ. கதிர்காமநாதன், ச. சற்குணமூர்த்தி, ந. கந்தையாபிள்ளை ந. பாலசுப்பிரமணியம் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகத்தெரிவாகினர். (உ)

## ஆலயச் சுற்றாடலில் இராணுவத் தடை அகற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாசையூர் அந்தோனியார் கோவிலுக்கு அருகாமையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள தடையை நீக்கி விடுமாறு 512 வது படையணிப் பொறுப்பதிகாரியிடம் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் கடிதமூலம் விடுத்த கோரிக்கைக்கு இன்றுவரை இராணுவத் தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என அந்தோனியார் ஆலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகாமையில் இராணுவத்தினர் தடை அரண் அமைத்திருப்பதனால், ஆலயத்திற்கு ஆராதனைக்குச் செல்லும் பக்தர்களுக்கு இடையூறாக இருப்பதாகவும்,

விசேட ஆராதனை வழிபாடுகளுக்கு பக்தர்கள் செல்ல அஞ்சுகிறார்கள்என்றும் இராணுவத் தரப்பினருக்கு சுட்டிக்காட்டி யாழ். மறைமாவட்ட ஆயரினால் கடிதம் அனுப்பப்பட்டபோதும் ஒரு மாதமாகியும் அதற்குப் பதில் கிடைக்கவில்லையென்றும் தேவாலய வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

(ம-110)

## வாழைப்பழ விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுச் சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

ஆலய உற்சவங்கள் இடம் பெற்று வருகின்றமையினாலேயே வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

(உ-10)

## பொதுநலவாயமகாநாட்டில் தமிழர் பிரச்சினையை எதிரொலிக்க வேண்டும்

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையை பொதுநலவாய மகாநாட்டில் எதிரொலிக்கச் செய்வது சர்வதேச தமிழ் சமூகத்தின் கடப்பாடு என குயின்ஸ்லாந்து தமிழ் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சகல பொதுநலவாய நாடுகளிலும் தமிழர்கள் வாழுகின்றனர். ஒவ்வொரு நாட்டுத் தூதுக்குழுவிற்கும் தமிழர் நிலை தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வகையில் பொதுநலவாய அரசுத் தலைவர்களது இம்மகாநாட்டின் அரங்கினைப் பயன்படுத்தி தமிழரது சுயநிர்ணய உரிமை, சமத்துவம் என்பவற்றை உள்ளடக்கியதாக, அவர்களது அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் வகையில் அரசியல் தீர்வு கிடைக்க சகலரது ஆதரவையும் நாம் கோரவேண்டும் என அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பொதுநலவாய மகாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 6 ஆம், 9 ஆம் திகதிகளில் அவுஸ்திரேலியாவின்பிறிஸ்பேர்ண் இல் நடைபெறவுள்ளது. (செ)

## புலிகளுடன் பேச சு.க.மத்தியகுழு தீர்மானம்

(வடமராட்சி கிழக்கு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான வேல் முருகு தங்கராசா இதனைத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்படி கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் வெளிநாடு ஒன்றில் இன்னும் சில வாரங்களில் பேச்சு இடம்பெறவுள்ளது.

தற்போது மறை முகமான வழிகளில் இருதரப்பும் பேசிக் கொண்டிருக்கின்றன விடுதலைப் புலிகள் தான் இந்தப் பேச்சுவார்த்தையின் கதாநாயகர்கள என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-43)

## மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் இம் மாத இறுதியில்

(ஊர்காவற்றுறை)

இளைஞர் கழகங்கள் பங்கு பற்றும் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகும் எனதேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகமும் இளைஞர் கழகங்களின் யாழ். மாவட்ட சம்மேளனமும் இணைந்து நடத்தும் இளைஞர்கழகவீரர்கள் பங்கு பற்றும் குழு தனி விளையாட்டுப் போட்டிகளே ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பிக்கபபடும்.

இதேவேளை, இளைஞர் கழகங்கள் பங்கு பற்றும் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை, உடுவில், சண்டிலிபபாய், வேலணை, பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பழை ஆகியபிர.செயலகங்களில்தற்பொழுது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-75)

## மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் நடமாடும் சேவை அண்மையில் அனலைதீவில் இடம்பெற்றது.

அனலைதீவில் உள்ள மக்களின் சேமிப்பு ஆற்றலினை தூண்டுதல் மற்றும சேமிப்பினை ஊக்குவித்தல் ஆகியன கருதியே இந் நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளமைபட்ட ... குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளையின் முகாமையாளர் ஜி. சற்குணபாலன் தலைமையில் இந் நடமாடும் சேவை அனலைதீவில் இடம் பெற்ற போது,

சுய தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்குவது தொடர்பாகவும் ஆராயப் (உ-75)

## வயோதிபர் மீது தாக்கு பதற்ற நிலை நீடிப்பு

(ஏழாலை)

தனிமையில் வசித்து வந்த வயோதிபர் மற்றும் அவரது உதவியாளர் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவம்மல்லாகம்பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இரவு வேளைகளில் அடிக்கடி இடம்பெறும் இத்தகைய சம்பவங்களால இப்பகுதி மக்கள் மத்தியில் பலத்த பதற்ற நிலை நீடித்துவருகின்றது என தெரியவருகின்றது

(க-12)

## தென்னைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

தென்னை மரங்களைத் தாக்கும் நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் அனலைதீவில் இடம்பெற்றது.

அனலை தீவில் காணப்படும் அதிகமான தென்னைகளை, நோய்த்தாக்கத்தில் இருந்து காத்து மக்களின பொருளியல் மேம்பாட்டிற்கு அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாக இக்கருத்தரங்கு இடம்பெற்றிருப்பது குறிப்பிடததக்கது

(உ-75)

## யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரின் கட்டுக் கோப்பை உடைத்தவர் பதில் ஆணையாளரே

### மகஜரில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பதில் ஆணையாளர் பதவியேற்ற காலத்திலிருந்து யாழ். மாநகர சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மீது மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை கண்டிக்கும் அதே வேளையில் கட்டுக் கோப்புடன்இயங்கியசுகாதாரப்பகுதியின் கட்டமைப்பை உடைத்தார்.

இன்று நடைபெறும் கண்டனப் பேரணி மற்றும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊழியர்கள் வெளியிட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யுத்தசூழ்நிலையாலும் யாழ்ப்பாணத்து மண்ணிலிருந்து சேவையாற்றிய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரனை சேவையிலிருந்து வெளியேற்றியும் பெண் ஊழியர்களாகிய எம்மை விரசமான வார்த்தை கொண்டு தூற்றியும் எமக்குரிய கோலஉடை, பிரயாணப்படி மேலதிக வேதனம் போன்றவற்றுக்குத் தடை விதித்தும் ஆண் தொழிலாளி ஒருவரை மருத்துவலீவில் நின்ற சமயம் அவரை காரணமின்றி கடமையில் இருந்து வெளியேற்றியும், எதேச்சாதிகாரமாக செயற்பட்டார்.

நாம் கடமை பாதிக்காத வகையில் ,கறுப்புப்பட்டி அணிந்து சாத்வீகமான முறையில் எமது பிரச்சினைகளை மாநகரசபை நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினோம். இக் கறுப்புப்பட்டி போராட்டம் குறித்து யாழ். மாநகர முதலவர் என். ரவிராஜ் அவர்களுக்கு அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிராத காரணத்தால் தொலைபேசிமூலம் தெரியப்படுத்தினோம்.

மூன்று தினங்களாக இடம் பெற்ற கறுப்புப்பட்டிப் போராட்டத்தையடுத்து யாழ்ப்பாணம் வந்த முதல்வர் எம்மை அழைத்து நிலைமைகளை கேட்டறிந்து தீர்வு காண்பதாகவும் உறுதி அளித்தார். ஆனால் நடந்ததோ தலைகீழ். கறுப்புப்பட்டி அணிந்து கடமையாற்றிய எம்மீது விசாரணைகள், விளக்கம் என்று நிலமை மோசம் அடைந்தது.

கறுப்புப்பட்டி போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் பழிவாங்கப்பட்டார்கள். அதன் ஒரு கட்டம் கடந்த எட்டு வருடமாக நிரந்தர நியமனம் இன்றி தற்காலிகமாக கடமையாற்றும் இருபத்தாறு (26) குடும்பநல உதவியாளர்களினது வேதனம் நிறுத்தப்பட்டது மட்டுமன்றி சித்திரை மாதத்தில் இருந்து கடமையில் இருந்து விலக்கப்படுவார்கள் என்றும் அச்சுறுத்தும் வகையில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

பதில் ஆணையாளர் இராசா தணிகாலசத்தின் இக் கொடூர செயலுக்கு முதல் வரும்உடந்தையாகஇருந்தார் என்பது மிகமிக வேதனைக்குரியதாகும். சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களாகிய எம்மை பழிவாங்கும் இரண்டாம் கட்டமாக நிரந்தர ஊழியர்களுக்கு பதவி இழப்பும், தற்காலிக ஊழியர்களுக்கு சேவை நீக்க கடிதமும், பதில் ஆணையாளரினால், இழப்புக்கடிதமும் அனுப்பியதோடு சிகிச்சை நிலையங்களுக்கு நாம் செல்ல முடியாதவாறு புதிய பூட்டுக்களை பூட்டி நிலையங்கள் முடப்பட்டன. இதனால் தாய்சேய் நல சிகிச்சைகள் பாதிப்புற்றன.

இந் நிலையில் யாழ் மாவட்ட நீதவான் மதிப்பார்ந்த இ.த. விக்கினராஜா அவர்கள் எம்மையும், சுகாதாரவைத்தியஅதிகாரி, வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனையும், பதில் ஆணையாளர் இராசா தணிகாசலத்தையும் அழைத்து, உண்மை நிலைகளை புரிந்து கொண்டு சுகாதாரக் கட்டமைப்பை குலைக்க வேண்டாமெனவும் புதிய சுகாதார வைத்தியஅதிகாரி ஒருவரை நியமிக்க ஆளுனர் அனுமதி அளிப்பின் அதுவரை வைத்திய கலாநிதி இ தெய்வேந்திரனே வைத்திய அதிகாரியாக கடமை ஆற்ற வேண்டும் என்றும்' எமதுவேலை நீக்கத்தை ரத்துச் செய்யுமாறும் பதில் ஆணையாளரிடம் தெரிவித்தார்.

ஆனால் பதில் ஆணையாளர் நீதிபதியின் ஆலோசனையை தட்டிக்கழித்துவிட்டு பழிவாங்கும் படலத்தை தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றார். இந் நிலையில் 36 ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். சுகாதார வைத்திய அதிகாரிக்கு கட்டாய லீவு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையில் யுத்தத்தின் மத்தியிலும் களங்கமற்ற சேவையை ஆற்றிய எம்மை வேலை நீக்கம் செய்து விரசமாக பண்பற்ற வார்த்தைகளால் தூற்றியும் மக்களோடுமக்களாக இருந்து மருத்துவப் பணியாற்றிய வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் அவர்களை, கட்டாய லீவில் அனுப்பியும் அடாவடித்தனமபுரிகின்றார் பதில் ஆணையாளரினால் இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள்சுகாதார அமைச்சர், ஆளுனர் வடக்கு- கிழக்கு மாகாண சபை, முதல்வர் யாழ். மாநகரசபை மாகாண சுகாதாரப் பணிப்பாளர்,வடக்கு-கிழக்கு ஆணையாளர்வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிசபை. கௌரவ ஆணையாளர் யாழ். மநகரசபை, அரச அதிபர் யாழ். செயலகம்சுகாதார வைத்திய அதிகாரி யாழ். மாநகரசபை, 512 படையணி அதிகாரி யாழ்ப்பாணம்- பொலிஸ்அத்தியட்சகர்யாழ்ப்பாணம், ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## இராசி பலன்

2-4-2001
(பங்குனி 20, திங்கள்)
நவமி மு.இ 10.33 வரை
புனர்பூசம் பி.ப 4 02 வரை
ராகுகாலம் 7.41- 9 11
சுபநேரம் 12.11- 1.41
அமிர்த சித்தம், ஸ்ரீராம நவமி.

**மேடம்**
தன்னம்பிக்கைக் குறைவு, மனச்சஞ்சலம், காரிய தாமதம், அற்பர் நேசம்.

**இடபம்**
வாக்கு மேன்மை, காரிய நன்மை, பிரயாணம், அந்நியர் சந்திப்பு.

**மிதுனம்**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், மதிப்புக் குறைவு, தனவிரயம்.

**கடகம்**
ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆசி, புதிய பொருள் சேர்க்கை, காரியம்கைகூடும்.

**சிங்கம்**
உணர்ச்சி வசப்படல், பிரயாணம், சுபசெலவு, பிதா சிந்தை.

**கன்னி**
தனலாபம், கீர்த்தி, மன மகிழ்ச்சி, காரிய நன்மை.

**துலாம்**
தொழில் நன்மை, அதிகார மேன்மை, சுப நிகழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, பிரயாணம், ஆன்றோர் ஆசி, வயிற்றுக் கோளாறு.

**தனுசு**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், காரியத் தடங்கல், வியாதி,

**மகரம்**
காரியநன்மை, நண்பர்கள் சந்திப்பு, தனவரவு, போசன சுகம்.

**கும்பம்**
பகைவர் விலகுவர், உடல் நலமடைதல், முயற்சி கைகூடும், திடீர் நன்மை.

**மீனம்**
தாழ்வு நிலை, அமைதிக் குறைவு, காரிய தாமதம், உஷ்ண வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## தட்டிக்கேட்ட மாணவரை தாக்கிய வீணர்

(யாழ்ப்பாணம்)

உலக முட்டாள் தினமான நேற்று,மை தெளித்து வழியால் போவோர் வருவோர்க்குத் தொல்லை கொடுத்து வந்த குழுவுக்கும், அதனைத் தட்டிக்கேட்ட மாணவர் குழாத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதல், அவ்வழியால் சென்றவர்களின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

யாழ்.கன்னாதிட்டிப் பகுதியில் நின்ற சில இளைஞர்கள் டண்பற்ற விதத்தில் வீதியால் போவோர் வருவோர் மீது மை தெளித்துத் தொல்லை கொடுத்தனர்.

இதனைக் கண்ணுற்ற தனியார் கல்வி நிறுவனம் சென்ற உயர்தர மாணவர் சிலர், இம் முயற்சியைக் கைவிடுமாறு ஆலோசனை கூறியவேளை,

இரு தரப்பினர்க்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியதாகவும் வழியால் சென்ற சிலரின் தலையீட்டினால் தடுக்கப்பட்டதாகவும்தெரிய வந்துள்ளது. (உ-10)

## இரவு நேர திருமலை ரயிலில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் இரவு ரயிலில் பயணம் செய்வோர் தமது அடையாள அட்டை உட்பட முக்கிய ஆவணங்களை பறிகொடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயிலில் பயணம் செய்வோர் கொழும்பில் இருந்து யாழ் செல்லவே, திருகோணமலைக்கு இரவு ரயிலில் பயணிக்கிறார்கள் என்றும்,

தமது உடமைகளை இழந்த பலர் தம்மிடம் வந்து முறைப்பாடு செய்திருப்பதாகவும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-07)

## கட்டணத்தில் வேறுபாடு பிரயாணிகள் அதிருப்தி

(செம்பியன்பற்று)

பருத்தித்துறை யாழ்ப்பாணம் போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும்தனியார்சிற்றூர்திகளில் கண்ட பாட்டில் கட்டண அறவீடு இடம் பெறுவதாக பிரயாணிகள்தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டண விபரம் பற்றிய அறிவித்தல் சிற்றூர்திகளில் ஒட்டப்பட்டும் கூடஅதனையும்மீறிசிலவேளைகளில்கூடுதலான கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-42)

## அரச வர்த்தமானிகள் யாழ். வருவதில் தாமதம்

(சல்வயல்)

அரச வர்த்தமானி அறிவித்தல்கள் குடாநாட்டுக்கு காலம் தாழ்த்தியே கிடைத்து வருவதால் பல்வேறு தொழில் வாய்ப்புக்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை பலர் இழந்து வருகின்றனர்.

மேற்படி வர்த்தமானிகள் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்தே இங்கு வந்து சேர்கின்றன.

வர்த்தமானியில் கோரப்பட்டிருக்கும் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை முடிந்த பின்பு அல்லது முடிவுறும் தறுவாயிலேயே இவை குடாநாட்டு மக்களின் கைகளுக்கு கிடைப்பதால்பல்வேறு சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போவதுடன்,

அரச வர்த்தமானி அறிவித்தல்கள் நடைமுறைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியாமையால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் கூறப்படுகிறது. (உ-111)

## அங்கத்துவத்தை உறுதிப்படுத்துக

(துன்னாலை)

தென்மராட்சி சாவகச்சேரி கைத்தொழிலாளர் வணிகர் மன்றத்தின் அங்கத்தலைவர்கள் அனைவரையும் தமது மன்றின் யாப்பு ஒழுங்கமைவுக்கு ஏற்ப சந்தாப் பணத்தை செலுத்தி அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி தமது மன்றின் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறும் மன்றின் செயலாளர் வ. இராசதுரை அறிவித்துள்ளார். (உ-4)

## அமைச்சரின் ஏற்பாட்டில் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு கடந்த வெள்ளியன்று ஈ.பி.டி.பி யினரால் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்ட ரூபா 50 இலட்சம் நிதிமூலம் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரமுகர் நிஷாந்தன் வைபவ ரீதியாகக் கையளித்தார்.

இதேவேளை, யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கு வேண்டிய விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டமை தெரிந்ததே. (உ)

## வீதி சீர் இல்லை

(செம்பியன்பற்று)

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. [உ-42)

## கணித பாடப் புத்தகங்கள் வந்து சேரவில்லை; உயர் கல்வி இழக்கும் அபாயம்

(செம்பியன்பற்று)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணித பாடப்புத்தகங்கள் இன்னமும் வந்து சேரவில்லை

இதனால் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களும், கற்கும் மாணவர்களும் பெரும் பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை,

கணிதபாடம் சித்தியடையத் தவறும் மாணவர்கள் உயர்தரம் கற்கும் வாய்ப்பினை இழப்பதால் அவர்களது எதிர்கால வாழ்வே இருள்மயமாகும் அபாயம் எதிர் நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. [உ-42]

## இன்று ஒரு தகவல்

# பலவீனத்தின் பரிமாணம்

'என் நிலையில் நீங்கள் இருந்தால்த்தான் அது உங்களுக்குப் புரியும்' இந்த வசனத்தை நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எங்கெங்கோ சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். 'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்த்தான் தெரியும்' என்று அலுத்துக்கொண்டு எம்மவர்கள் சொல்லும் பாமர வசனம் கூட இதைத்தான் பறை சாற்றுகின்றது. உளவியலாளரும், முகாமைத்துவ அறிஞருமான எஸ்ரன் மாயோ என்பவர் இதனை 'மற்றவர் நிலைக்கு உள்ளாகல்' என்ற தலைப்பின் கீழ் விளக்குகிறார்.

வாழ்க்கையில் நாம் எந்த முடிவை எடுக்கும் போதும் மற்றவரின் நிலையிலிருந்து நோக்கும் போது தான் அதன் 'கனம்' எவ்வளவென்று புரிகிறது. மேகமாய் மிதந்து கொண்டிருக்கும் தண்ணீருக்கு கீழே அலைகள் படும் அவஸ்தை புரிவதில்லை. தென்றலின் மென்மையான வருடலில் சிலிர்த்துப் போகின்ற தாவரங்களுக்கு புயலால் முறிந்துபோன மரங்களின் மன வேதனை தெரிவதில்லை. அது போலத்தான் ஒருவர் படும் அவஸ்தைகளும் அவரது நிலைக்கு மாறி யோசிக்கும் போது தான் அதன் ஆழம் எவ்வளவென்று எமக்குப் புரிகிறது. இந்த நிலைக்கு உலகம் எப்போது உந்தப்படுகிறதோ அப்போது தான் இங்கே எல்லாமும் ஆரோக்கியப்படும். உலகமும் அர்த்தப்படும். வளைந்து நெளிந்து செல்லும் நதிக்கு ஆதரவு கொடுக்கும் கரையினைப்போல் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் பூமியின் புன்னகையைக் கண் முன்னே நாம் கண்டுகளிக்கலாம் ஒவ்வொரு உயிருக்கும் உணர்வுண்டு என்ற உண்மையை உணர்ந்து கொண்டு அந்த உயிர்களின் தாகங்களைப்புரிந்துகொண்டு வாழ்வோமேயானால் வாழ்க்கையில் பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போய்விடும்.

எம் எல்லோருக்குமே மனத்தின் ஏதோ ஒரு பகுதியில் ஒற்றுமையாகத் தானிருக்கிறது. சுகம் வந்தால் துள்ளுவதும், கோபம் வந்தால் கொதிப்பதும், சோகம் வந்தால் வாடுவதும் வழமையான வரையறைகள் தான். அளவுகள் இங்கு வேறுபட்டாலும் அடிப்படை ஒன்று தான். சிலர் இந்த உணர்வுகளை அடக்கி ஆழ் மனத்துக்குள்ளேயே அழித்து விடுகிறார்கள். வேறு சிலர் அவற்றை பூகம்பமாய் வெளிப்படுத்தி இடிந்து போய் விடுகிறார்கள். இந்த உணர்வுகளை ஆவேசமாய் வெளிப்படுத்துவது எந்தளவு தவறோ அந்தளவு அவற்றை அடக்குவதும் உடம்புக்கு ஆகாதென்று உளவியல் கருத்துக்கள் உரைக்கின்றன இவ் இரண்டுமே பலவீனத்தின் பரிமாணங்கள் தாம். எழுகின்ற உணர்வுகளை. பக்குவமாய் பாதை அமைத்து வெளிப்படுத்தினால் உடம்பும் உணர்வும் சுகப்படும். உலகமும் எம் வசப்படும்.

ரீ.ரீ.மயூரன்

# வலி-வலய பாட. இடையிலான வலைப்பந்து இறுதிமுடிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வலயப் பாடசாலைகளுக் கிடையிலான 15, 17.19 வயதிற்கு உட்பட்ட கீழ்ப் பிரிவு வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு,

15 வயதிற்கு உட்பட்ட பிரிவில் யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி எதிர் யா/சண் இந்துக்கல்லூரி,

17 வயதிற்கு உட்பட்ட அணியில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் யா/தெல். யூனியன் கல்லூரி.

19 வயதிற்கு உட்பட்ட பிரிவில் யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி எதிர் சண்/இந்துககல்லூரி வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவாகியுள்ளன. (செ-02)

# 10ஆம் திகதிக்கு முன்பாக உலர் உணவு நிவாரணம்

## கோப்பாய் பிர. செயலகம் தெரிவிப்பு

(ஆவரங்கால்)

வலிகாமம் கிழக்கில் பங்குனி மாதத்திற்கான உலர் உணவு நிவாரணம் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாகவும் ஏற்கனவே மீளாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை மாதத்திற்கான நிவாரணமும் விரைவில் வழங்கப்பட்டுவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-57)

# பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கான பணத்தை திரட்டும் வழி முறைகள் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது என ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஊடகத்துறையில் எதிரணியினருக்கு அரசாங்கம் வழங்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் தவறி விடுகின்றனர். இதற்கு அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது.

எதிரணியினர் சந்தர்ப்பத்தை தவற விட்ட பின் அரசாங்கத்தை குறைகூறுவதில் அர்த்தமில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரணதுங்காவின் அரசாங்கத்திலேயே ஊடகத்துறையினர் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். [செ]

# தமிழருக்கு சம உரிமை கிடைத்தால்

# தமிழீழகோரிக்கையைபுலிகள்கைவிடுவர்

[கொழும்பு]

தமிழருக்கு சமவுரிமை கிடைத்தால் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் அங்கு சென்ற நீதிக்கும் சமாதானத்திற்குமான குழுவிடம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஒரே எண்ணம் தனித் தமிழீழம் மட்டுமே எனவும், வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள மக்கள் வந்து வாழ அனுமதிக்கமாட்டார்கள் எனவும், பேரினவாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் தென்னிலங்கையில் பிரச்சாரம் செய்து வருவது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

தமிழ் மக்கள் சம உரிமை பெற்று நிம்மதியாக வாழ வழியேற்படுத்தப்பட்டால் விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிடத் தயாராகவுள்ளனர்.

அதேபோல சிங்கள மக்களை வரவேண்டாம் என ஒருநாளும் கூறவில்லை. சிங்கள மக்களை அன்போடு வரவேற்க அவர்கள் எந்நேரமும் தயாராக உள்ளனர் என்பதைத் தென்பகுதி சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆயர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை மன்னாருக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அக் குழுவினரிடம் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி தெரிவித்த விடயங்கள் சமாதான முயற்சிகளுக்கு பாதகமானவையாகவே அமைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## இராம நவமியும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர அழ்வார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை இராம நவமியை முன்னிட்டு காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து மேளக்கச்சேரி, பட்டிமன்றம், இசைநிகழ்ச்சி ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (செ-111)

## துணைவேந்தர் சைப்பிரஸ் பயணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இம்மாத இறுதி வாரத்தில் சைப்பிரஸிற்கு பயணமாகவுள்ளார்.

சைப்பிரஸில் இம்மாதம் 22ம் திகதி முதல் 26ம திகதிவரை நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் துணை வேந்தர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாகவே அவர் பயணமாகவுள்ளார்.

பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த 400 பல்கலைக் கழக துணைவேந்தர்கள் இம் மகாநாட்டில் கலந்து கொள்வர். இம்மகாநாடு நான்கு வருடத்திற்கு ஒருமுறை இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது [க-வ]

## நல்லூரில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின்விளையாட்டு அவையின் கலந்துரையாடல் கடந்த 30 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப-அலுவலக கேட்போர் கூடத்தில் தலைவர் க.மணிபல்லவ ராஜன் தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதி கிராம சேவையாளர்கள் சன சமூக நிலையப் பிரதிநிதிகள் இந நிகழ்வில் கலந்து கொண்டனர். [க-104]

## சுவாமிநாதனுக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக பணியாற்றி வந்த சுவாமிநாதனிற்கு பிரதிச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

சுவாமிநாதன் இலங்கைத் திட்டமிடல் சேவையில் முதலாம் வகுப்பிலுள்ள மூத்த அதிகாரியாவார்.

கரவை விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான சுவாமிநாதன் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைச்சிறப்புப் பட்டதாரியும், பண்டார நாயக்கா சர்வதேசக் கற்கை நிலையத்திலும் 'வேல்ஸ், பல்கலைக் கழகத்திலும் முறையே சர்வதேச விவகாரங்களிலும், சமூகத்திட்டமிடல் முகாமைத்துவத்திலும் பட்டப்பின் பட்டங்களைப் பெற்றவராவார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# முதற்கலை தேர்வு பரீட்சை 6 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக் கழக வெளிநிலை தேர்வு நாடிகளிற்கான முதற்கலைத் தேர்வுப் பரீட்சை இம்மாதம் 6 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக மேற்படி பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக இராமநதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான முன்னோடி நடவடிக்கையை மேற்கொள்ளவென பேராசிரியர்களை கொண்ட உயர் மட்டகுழுவொன்றுவிரைவில் யாழ்ப்பாணம்விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# வன்னிக்கான பொருட்கள் மீதான தடை நீக்கம்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பமைச்சினால் இதுவரை தடைவிதிக்கப்பட்டிருந்த சில பொருட்கள் மீதான தடைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன,

இத் தடை நீக்கத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தடை நீக்கப்பட்ட பொருட்களின் பட்டியலை பாதுகாப்பமைச்சின் செயலாளர், சந்திரானந்த டிசில்வா வெளியிட்டுள்ளதுடன், இதனை நடைமுறைப் படுத்துமாறு படையினருக்கு உத்தரவும் பிறப்பித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், பைக்கட்டில் அடைக்கப்பட்ட பழரச வகைகள், குடிவகைகள்; சூப், நூடில்ஸ், தலைவலி நிவாரண மாத்திரைகள், சிகரெட் வகைகள் ஆகியன தடை நீக்கப்பட்ட பொருட்களில் சிலவாகும்.

இப் பொருட்கள் முன்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இயங்கும் கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும், பொது மக்கள் இப் பொருட்களை அப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-04)

# படைப்பலம் பெருக்குவதில் இலங்கை அரசு முனைப்பு

(கொழும்பு)

இலங்கைவிமானப்படையை மேலும் வலுவுள்ளதாக்கும் வகையில் இஸ்ரேலிடம் இருந்து புதிய தானியங்கி விமானங்களை கொள்வனவு செய்து பயன்பாட்டில் விடப்பட்டுள்ளதாக தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தியா, தாய்லாந்து, தாய்வான் போன்ற நாடுகளில் வேவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் ஐ.ஏ.ஐ. சேக்கர்ரக தானியங்கி விமானங்களே இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, ரஷ்யாவில் இருந்து துருப்புக்காவி வாகனங்கள் டாங்கிகள், ஆகியவற்றைக் கொள்வனவு செய்யும் வகையிலான ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

# இன்று அச்சுவேலியில் நடமாடும் சேவை

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்டு வரும் நடமாடும் சேவை இன்று வலிகிழக்குப் பிரதேச சபை, அச்சுவேலி உப அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

சிறுப்பிட்டி, நவக்கிரி, புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, அச்சுவேலி, வளலாய், இடைக்காட்டுப் பகுதி மக்கள் இச் சேவையில் கலந்து கொண்டு தமது குறை நிறைகளைத் தெரிவு செய்வதுடன், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-57)

### ஐந்து மாநிலங்களில்

# மேமாதத்தில் சட்டசபைத் தேர்தல்

# இந்திய தேர்தல் ஆணையர் தெரிவிப்பு

(சென்னை)

மே மாதம் 10ஆம் திகதி இந்யாவின் ஐந்து மாநிலங்களில் சட்டசபைகளுக்கான ஒரு நாள் தேர்தல் நடைபெற இருக்கிறது.

மேற்கு வங்கம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு, அஸ்ஸாம் மாநிலங்களுக்கான தேர்தல் நடைபெற இருப்பதாக தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதியாக இருக்குமென்றும் வாக்குகள் எண்ணும் பணி மே மாதம் 13 ஆம் திகதி இடம்பெறுமென்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் டாக்டர் ஹில் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் கட்சிகள் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறைகள் இன்று தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளன. (து)

# தேர்தலின் பின் 'திரிநாமுல் காங்கிரஸ் நிலை எப்படியிருக்கும்?

## அரசியல் அவதானிகள் கருத்து

(புதுடில்லி)

போலி ஆயுதப்பேர ஊழலில் பிரிந்து சென்ற திரிநாமுல காங்கிரஸ் மேற்குவங்கத்தில் வெற்றி பெறுமா என்பது குறித்து அரசியல் அவதானிகள ஐயுறவையும் கருத்தையும் வெளியிட்டுள்ளனர்.

இடதுசாரிகளின் கோட்டையான மேற்குவங்க அரசைக் கவிழ்க்க பாரதியஜனதாவில் இருந்து கொண்டு மம்தா பானர்ஜி பலமுறை முயற்சித்தார்.

மேற்குவங்க அன்றைய அரசால் நசுக்கப்பட்டார். இன்று சோனியாவுடன் காங்கிரசில் கூட்டுச்சேர ஒடித்திரிகிறார்.

மேற்குவங்கத்தில் இடதுசாரிகள் ஒருபுறம் பாரதிய ஜனதா ஒருபுறம், யார் அரசு அமைப்பார்கள், யார் மண் கவ்வுவார்கள். இடதுசாரிகள் கணிசமானஅளவு இடங்களைப் பெறுவார்கள். பராதிய ஜனதாவும், மம்தாவும் எவ்வளவு எடுப்பார்கள்.

யார் யாருடன் தேர்தலின் பின் கூட்டு சேர்வார்கள், அரசுஅமைப்பார்கள்.

இடது சாரிகளுக்கே மீண்டும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தமது கருத்தை வெளியிட்டுள்ளனர். (து)

# யூகோ. முன்னாள் ஜனாதிபதி கைது இல்லத்தை சூழ பொலிஸ் வாகனம்

(இலண்டன்)

யூகோஸ்சிலாவியமுன்னாள் ஜனாதிபதி சிலோடபன் மெலோசபிக் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அறிவிப்பு உத்தியோக பூர்வமாக வெளிவராத போதும்அவரது இலலத்தைச் சுற்றி பொலீஸ் வாகனங்கள் காணப்பட்டதாகவும் மெலோசபிக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றும். நம்பகரமான ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மெலோசபிக் பதவியிலிருந்த பொழுது மனித உரிமை மீறல்கள் போன்ற பல குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தார் என்றும் அதனால் கைது செய்யப்பட்டார்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்டபிள்யு புஷ் தொலைக்காட்சியில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்: யூகோமுன்னாள் ஜனாதிபதி நீதிமன்றில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான சகல உதவிகளையும் தாம் தருவதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில் யூகோஸ்சிலாவியாவிற்கு தொடர்ந்தும் நிதிஉதவி வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பாக பொறுத்திருந்து தான் முடிவு சொல்ல முடியுமென்று அமெரிக்க உள்துறை அமைச்சர் கொலின்பவர் தெரிவித்துள்ளார். (து)

# விமான விபத்து 18 பேர் ஸ்தலத்தில் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கொலறாடோ மாநிலத்தின் அஸ்பன் பகுதியில்விமானம் ஒன்று விபத்திற்கு உள்ளாகியதில் அதில பயணம் மேற்கொண்ட 18 பேரும் பலியாகியுள்ளனர்.

இவ் விமானவிபத்திற்கு, அபபகுதியில் நிலவிய கடுமையான பனியே காரணம் என தெரிய வந்துள்ளது.

விமானம் நெடுஞ்சாலை ஒன்றின் ஓரமாக வீழ்ந்தாலும் நெடுஞ்சாலையில் சென்றோர் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை; [உ-03]

## இந்திய அரசினால்

# 700 க்கு மேற்பட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தடை நீக்கம்

(புதுடில்லி)

இந்திய அரசு 725பொட்ருகளுக்கு இறக்குமதித் தடையை நீக்கியுள்ளது.

இதனால் நாட்டில் பொருட்களின தட்டுப்பாடு நீங்குமென்றும் பலரக உற்பத்திகளை இந்திய மக்கள் சந்திக்க நேரிடுமென்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முரசொலி மாறன் தெரிவித்தார்.

இதே வேளை, புதியரக ஏற்றுமதிகளுக்கு சந்தர்ப்பம் ஏறபடுமென்றும் விவசாயப் பொருட்களை மாத்திரம் அரசு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இறக்குமதி செய்யுமென்றும் வர்த்தகத் துறை மத்திய அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, இந்திய இடது சாரிக் கட்சிகள் இறக்குமதித் தடை நீக்கத்தால் அந்நிய நாட்டுப் பொருட்கள் இந்தியாவிற்குள் புகுந்து நமது நாட்டில் சில தொழிற்சாலைகளில் உற்பத்தி குறைந்துவிடும் அதனால் தொழிற்சாலைகளை மூடவேண்டி வரும் என்று வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதேவேளை புதிய ஏற்றுமதியில் 18 வீதம் கூடும் என்று முரசொலிமாறன் தெரிவித்தார். (து)

## செய்திப்பரல்

★ நோர்வே ஆராய்ச்சியாளரும, எழுததாளருமான ஹெலகே இங்ஸ்டாட் தனது 102 ஆவது வயதில் காலமானார்.

★ சீனாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அமெரிக்க பிரஜையான காஒஷானை விடுதலை செய்யுமாறு வெளிநாட்டமைச்சு சீனாவை வலியுறுத்தியுள்ளது.

★ கயானா தேர்தலில் தோல்வியுற்ற எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தலைநகரில் பல இடங்களில் குழப்பங்களை விளைவித்து வருகின்றனர்.

★ சான்பிரான்ஸிஸ்கோவில் இரு இராட்சத நாய்கள் இளம் பெண் ஒருவரை அவரது வீட்டில் வைத்து தாக்கியுள்ளன.

★ அமெரிக்க பிரதிநிதிகள் சபை, திருமணமான தம்பதியினருக்கு 40,000 கோடி டொலர் வரிக்குறைப்பு மசோதாவை நிறைவேற்றவுள்ளது.

# வரிக்குறைப்பு; ஜனநாயக கட்சி ஆட்சேபம்

(வாஷிங்டன்)

ஜனாதிபதி புஷ்ஷின் வரிக்குறைப்பு மிக அதிகமானது என்று ஜனநாயக கட்சியினர் கூறியுள்ளனர்.

இதனை பிரதிநிதிகள் சபை நிராகரித்துள்ளதுடன் 2002 ஆம் ஆண்டுக்கு 190 ஆயிரம் கோடி டொலர் கொண்ட பட்ஜெட்டை அங்கீகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டுகளில் 160 ஆயிரம் கோடி டொலர் வரிக்குறைப்பை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (உ-31)


## உலகதரிசன

# அறிவுப் போட்டி இல-8

## பாராட்டுப் பெறுவோர்

(நேற்றய தொடர்ச்சி)

★ சுதர்சினி - சுரேஸ்
293/3 றக்கா றோட், யாழ்ப்பாணம்

★ வடிவேலு வரதராசா
கோயில் வீதி, மல்லாகம்

★ திருமதி ரீட்டா டேவிட்
33 மதிட்ரல் வீதி, யாழ்ப்பாணம்

★ ஜேக்கப் அன்ரன் பிறேமகாந்தன்
19/2,2 ஆம் குறுக்கு வீதி பாஷையூர், யாழ்ப்பாணம்

★ சீவரத்தினம் சுஜிகரன்
கச்சாய் வடக்கு, கொடிகாமம்

★ ஜி.காந்தன்
டி 20, தொடர்மாடி குருநகர், யாழ்ப்பாணம்

★ கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

★ செல்வநாயகம் அருந்ததி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

★ கேமலன்
கொக்குவில், யாழ்ப்பாணம்

★ செ.அருட்குமரன்
பிரதேச செயலகம் நல்லூர்

8 ஆவது உலகதரிசனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவது

**மில்க்வைற் நீலசோப்**
**மில்க்வைற் பவர் சோப்**

தயாரிப்பாளர்களான

**மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்**

527.கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்


# தீவிரவாதப்பெண் கைதிகள் சிறையிலிருந்து தப்பினர்

(காட்மண்டு)

நேபாளத்தில் பெண்சிறைக் கைதிகள் ஆறுபேர் தப்பிச் சென்றுள்ளனர்.

அதிதீவிர வாத இயக்கத்தைச் சேர்ந்தஇந்தஆறுபெண்களும் சிறைச்சாலையிலிருந்து சுரங்கம் தோண்டி வெளியேறிபதாகவும், அந்தச் சந்தர்ப்பத்தில் வெளியாரைத் திசை திரும்பும்நோக்கில்குண்டினை வெடிக்க செய்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (து)

# நெரிசலில் சிக்குண்டு இருபது பேர் பலி

(லாகூர்)

பாகிஸ்தானில் லாகூர் அருகே ஒரு சமய நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள் நெரிசலில் சிக்குண்டு இருபது பேர் இறந்தனர். முப்பது பேர் காயமடைந்தனர்.

லாகூர் அருகே சொர்க்க வாசல் என்ற குறுகிய வீதியில் எதிரும் புதிருமாக வந்த மக்கள் நெரிசலில் சிக்குண்டதில் இந்தக் கோர உயிர்ப் பலிகள் நிகழ்ந்துள்ளன. (து)

# எறிகணை வீச்சினால் பத்திரிகையாளர் பலி

(லண்டன்)

மஸடோனியாவிலிருந்து ஏவப்பட்ட எறிகணையில் கொசோவோவில் உள்ள அல்பேனியர் ஒருவரும் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவரும் கொல்லப்பட்டதுடன், 20சிவிலியன்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கொசோவோ கிராமமான கிரிவெளிக்கு பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் செய்தி சேகரிக்க சென்ற போதேஇச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கொசோவோவுக்குள் உள்ள இலக்குகள் மீது மஸடோனியப்படைகள் தாக்குதல் நடத்தவில்லை என மஸடோனிய இராணுவ அதிகாரிமறுத்துள்ளார்.

இதேவேளை, அல்பேனிய கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப் பட்டதும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உள்ளதாக மஸடோனியா ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும்இடையிலான பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராககலந்துகொள்ளப்போவதில்லைஎனஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல் மன்னாவாம் மன்னர்க்கொளி

குறள்

# வலம்புரி

## ஊரடங்கை மாற்றுக!

யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துகின்ற ஊரடங்குச்சட்டத்தினால் மக்கள் படும் அவலம் சொல்லி மாழாது. அதுபற்றி பலதடவைகள் இப்பகுதியில் எடுத்துக் கூறியாகிவிட்டது. ஆனால் நிலைமையில் மாற்றமில்லை அதற்கு என்னதான் காரணமென்றால் மக்கள் நலனில், அக்கறையுடையவர்கள் நம்மத்தியில் இல்லையென்றேகருத வேண்டியுள்ளது. அத்துடன் இராணுவப் பொறுப்பதிகாரிகளுக்கும் மக்கள் படும் துன்பம் தெரிவதாக இல்லை.

பழைய காலத்தில் மன்னராட்சியில் மன்னன் மாறுவேடம் பூண்டு மக்களின் குறைகளைக் கண்டறிவான் ஆனால் இப்போது மாறுவேடத்தை வினோத உடைப்போட்டிகளில் மட்டுமேகாணலாம்

இராணுவ அதிகாரிகள் கட்டளை இடுகிறார்கள் அதனை சிப்பாய்கள் சிரமேற் கொள்கிறார்கள்.

கதிரவன் மேற்றிசையில் மறைந்தவுடன் பொதுமக்கள், வர்த்தகர்கள் ஏக்கத்துடன் வியர்க்க விறுவிறுக்க பாய்ந்தடித்து ஓடுகிறார்கள் ஏன்? எட்டு மணியென்றால் அந்தோ கதிதான். அடையாள அட்டைகள் சோதனைச்சாவடிகளில் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். மீண்டும் அதனைப் பெறுவதாயின் ஒரு நாள் முழுவதும் செலவிடவேண்டும். நேரமோ போதாதென்றிருக்கும் போது, அடையாள அட்டைக்காகத் தூங்குவதாயின் அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்தும் மக்களின் நிலை என்ன என்பதைஇராணுவப் பொறுப்பதிகாரிகள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இரவு எட்டு மணிக்கு ஊரடங்குஎன்றால்பழைய நேரம் 7.30 மணிக்கு ஊரடங்கு ஆரம்பிக்கப்படுகிறது. இரவு 7.30 மணிக்குள் நாளாந்த இயந்திர வாழ்வை முடிவுக்குக் கொண்டுவருவதென்றால் அதைவிடக் கடினம் ஒன்றுமில்லையெனலாம்

எனவே ஊரடங்குச்சட்டத்தினால் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை இராணுவப் பொறுப்பதிகாரிகள் உணர்ந்து கொண்டு ஊரடங்கு நேரத்தை இரவு 9.30 மணிக்கு மாற்றினால் ஓரளவேனும்வழமையான கருமங்களை ஆற்ற முடியும்.

# பாவ விமோசனம் தரும் ராம நாமம் விளங்கி

# மகாவிஷ்ணு மானுடனாயுதித்த ஸ்ரீராம நவமி

ஒரு நாள் காலை நேரம், நாரத முனிவரின் வருகையால், அயோத்தியை அரசு புரிந்து வரும் சூரிய வம்சத்து ராமனைப் பற்றிய கதைகளையும் ராமனது பெருமைகளையும் அறிந்து கொண்ட வால்மீகி ரிஷியானவர் குளிப்பதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றிருந்தார். ரிஷியின் மனதிலே ராமனது பெருமைகளும், செயல்களும் தான் நிழலாடிக் கொண்டிருந்தன. அச்சமயம் மரக்கிளையில் ஆணும் பெண்ணுமாக விளையாடிக் கொண்டிருந்த கிரெளஞ்சப் பறவைகளில் ஒன்று ஒரு வேடன் தொடுத்த பாணம் பட்டு நிலத்தில் வீழ்ந்து இறந்தது. பெண் பறவையானது தன் காதலன் இறந்ததைப் பார்த்துக் சதறியழுதது.

### சாபமிட்டார்

இதனைக் கண்ணுற்ற ரிஷியானவர், ''அடேய்பாவி இப்படிச் செய்தாயே, நீ எவ்வள நாவுள் வாழ்ந்தாலும், இருக்க இடமின்றி அலையக் கடவாய்'' என்று தன்னையுமறியாமல் வேடனைச் சபித்து விட்டார். அடுத்த கணம் இப்படி ஏன் சபித்தேன் என்று எண்ணி வருத்தப்பட்டார், கோபாவேசத்திற்கு இடமளித்து விட்டேனே! என்று துக்கப்பட்டார்.

ரிஷியின் வாயினின்றும் வெளியான சாபமொழிகள் ஓர் அற்புத நாதத்தோடும் சத்தத்தோடும் அவரது காதிலே திரும்பத் திரும்ப எதிரொலித்தது. இதையுணர்ந்த ரிஷியானவர் பெரும்வியப்பு அடைந்தார். பெரும்பாடாக அமைந்து விட்டதையுணர்ந்த ரிஷியானவர் இறைவன் திருவிளையாடல் இதுவென எண்ணி தியானத்தில் அமர்ந்து விட்டார்.

### நான்முகன் வாக்கு

தியான நிலையில் நான்முகக் கடவுள் தோன்றி ராம சரித்திரத்தை எழுதும் முறையை உமக்குக் காட்டவே இந்த நிகழ்ச்சி நடந்தது, சோகத்திலிருந்து தோன்றிய சுலோகத்தையே வைத்து ரகுநாதரின் கதையைப் பாடி, உலகத்துக்குதவும் திறமையை உமக்கு வரமாகத் தந்தேன் என்று சொல்லி மறைந்துபோனார்.

அதன்பின் ரிஷியானவர் சாபமொழிகளைத் திரும்பத் திரும்ப சீடர்களுடன் சேர்ந்து பாடிப்பாடி அதைச் செய்யுள் வடிவமாக மனதில் அமைத்துக் கொண்டார்கள். அதே சந்தத்தில் ராமசரித்திரத்தைப் பூரணமாகப் பாடித் தம்முடைய சீடர்களுக்கும்கற்பித்தார். இதுவே வால்மீகி ராமாயணத்தின் அற்புதத் தோற்றுவாய்.

## பிரம்மஸ்ரீ ச. க. சுதர்சனக்குரு

பிரதமகுரு

வல்புர ஆழ்வார் கோயில்

### புத்திரகாமேட்டி யாகம்

அயோத்தி என்னும் தலைநகரைக் கொண்ட, சரயு நதிபாயும் செழிப்புமிக்க கோசலை நாட்டை தசரதன் என்னும் மன்னன் நீதி தவறாமல் ஆண்டு வந்தான்.

ஆண்டுகள் பல கடந்த போதிலும் மன்னனுக்கு புத்திர பாக்கியம் இல்லாதது ஒரு பெருங்குறையாக இருந்தது அதற்காக ''ரிஷ்ய சிருங்க முனிவரின் தலைமையில், அசுவ மேதயாகமும், புத்திர காமேட்டி'' யாகமும் நடத்துவதற்கு மன்னன் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

அயோத்தியில் இப்படியிருக்க, இராவணனது கொடுமையை தாங்காத தேவர்கள், பிரம்ம தேவரிடம் போய் ''பகவானே தங்களிடமிருந்து வரத்தைப் பெற்றுக் கொண்டு இராவணன் என்ற அரக்கன் எங்களுக்கு மிகுந்த தொல்லை தந்திட வருகிறான். அவனை எம்மால் கொல்லவோ, அடக்கவோ, ஜெயிக்கவோ முடியவில்லை, அவன் அகங்காரத்தை அவன் கொடுமையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் யோசனையை நீர்தான்சொல்லியருள வேண்டுமென'' கூறிப்பணிந்து நின்றனர்.

### மகாவிஷ்ணுவிடம் வேண்டினர்

அதைக்கேட்ட பிரமன் ''இந்த இராவணன் தவம் செய்து வரம் பெற்றவன். தேவ, காந்தருவராக்ஷர்களால் தனக்கு மரணம் உண்டாகக் கூடாது, என்று வரம் பெற்றானே யொழிய மானிடர்களைப் பற்றிக் கேட்கவில்லை, ஆனபடியால் இதற்கு வழியுண்டு'' என்று கூறி எல்லோரும்மகாவிஷ்ணுவிடம் சரணடைந்தார்கள். மகாவிஷ்ணுவும் அவர்களின் துன்பத்தைப் போக்குவதாக உறுதிகூறி, ''பூவுலகில் புத்திர பாக்கியத்திற்காக யாகஞ் செய்யும் தசரதனுக்கு நான்கு குமாரர்களாக நான் அவதரித்து இராவணனைக் கொன்று உங்களுக்கு விடுதலை தருவேன்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அயோத்தியில் யாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொழுங்கனல்போன்ற ஒரு பெரிய உருவம் தீயிலிருந்து பொங்கி எழுந்தது. இரு கைகளிலும் ஒரு தங்கப் பாத்திரத்தை ஏந்திநின்றது. கம்பீரமான குரலில் சொல்லியது, ''தசரதமகாராஜனே உன்னுடையபிரார்த்னையை ஒப்புக் கொண்டு, தேவர்கள் இந்தப் பாயாசத்தை உன்மனைவியர்களுக்கென்று அனுப்பியிருந்தார்கள். உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும். இதைப் பெற்றுக் கொண்டு உன் பத்தினிகளுக்குத் தருவாயாக'' ''மங்களம்''! என்றது.

வேள்விமுடிந்தபின் அரசன் அந்தப்பாயாசப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, அந்தப்புரம் சென்று தனது மனைவியரிடம் 'தேவர்கள் தந்த பிரசாதம் இதோ கொண்டு வந்திருக்கிறேன், நீங்கள் மூவரும் இதையருந்திப்புத்திரப் பேறு அடையுங்கள்' என்றுகூறினான்.

### இராமன் பிறந்தான்

தசரதனுக்கு மூன்று தேவிமார். பாயாசத்தில் பாதியை கௌசல்யாதேவி அருந்தினாள். சுமித்திரைக்கும் அப்படியே தந்து, மிகுதியில் ஒரு பகுதியை கைகேயி அருந்தினாள். எஞ்சிநின்ற பாயாசத்தை தசரதன் மறுபடியும் சுமித்திரைக்குக் கொடுத்தான். தசரதனுடைய மூன்று மனைவிமார்களும் மனம் மகிழ்ந்து பூரித்தார்கள் எதிர்பார்த்தபடி மூன்று தேவிமார்களும் கர்ப்பம் தரித்தார்கள்.

கௌசல்யாதேவிராமனைப் பெற்றாள். கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திராதேவி, லக்ஷ்மணன், சத்துருக்கன் என்னும் இரு குமாரர்களைப் பெற்றாள்.

### ஸ்ரீ ராமநவமி

சித்திரை மாதத்திலே பூர்வபக்ஷ நவமித்திதியில் மகாவிஷ்ணுவானவர் ரகு வம்சத்தில் வந்து உதித்தார். அந்த நவமி விரதத்தினத்தில் இராமனுடைய பிரதிமையைச் செய்து அதை மண்டபத்தில் வைத்து சோடசோபசாரங்களால பூசை செய்து, அன்றையதினம் இரவு பகவானுடைய புராணக் கதைகளைக் கேட்டுக்கொண்டு, மறுநாள் காலையில் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சக்திக்கேற்றவாறு ராமருக்கு புநர் பூசைகள் செய்து நைவேத்யாதி தீபாராதனைகள்செய்தபிறகு பிராமணனைப் பூசித்து, தானங்கள்செய்து, போசனம் உண்ணவேண்டும்.

இந்த விரதத்தை அனுட்டிப்பவன் அனேக ஜென்மங்களிற் செய்த பாவங்களினின்றும் விடுபடுகின்றான்

எல்லா மந்திரங்களிலும் இராம சடாக்ஷர மந்திரம் சிரேஷ்டமானதென்று ஸ்காந்தபுராணத்தில்மோக்ஷ காண்டத்தில் ருத்திரகீதையில் ஸ்ரீராமனைக்குறித்து பரமசிவன் சொல்லுகிறார். 'மரணமடையும் ஒவ்வொரு மானுடனுடைய வலதுகாதில் உன் சம்பந்தமான ஸ்ரீராம ஸ்ரீராமராம என்கிற தாரக மந்திரத்தை உபதேசிக்கிறேன், ஆகையால் நீ தாரப் பிரம்மமென்று சொல்லப்படுவாய்' என்று பரமசிவன் சொல்லியருளினார் இந்த விரதத்தை பன்னிரண்டு வருடம் செய்தால் அவர்களுக்குச் சர்வபாவ விமுத்தம் ஸ்ரீராமனால் அருளப்படும். இவ்வாறு சுதீஷ்ணருக்கு அகஸ்த்தியர் கூறியருளினார். எனவே மானுடர்களாகிய நாமும் ஸ்ரீராமனின் பெருமைகளை உணர்ந்து 'ஸ்ரீராம ராம ஸ்ரீராமராம' என்று நாம சங்கீர்த்தனஞ் செய்து 'ஸ்ரீ ராம நவமி' தினத்தில் விரதமிருந்து ஸ்ரீராமரின் பேரருளைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவோமாக!

## தவக்காலச் சிந்தனை -34



நீங்கள் உலகப் போக்கின்படி தீர்ப்பிடுகிறீர்கள். நான் யாருக்கும் தீர்ப்பளிப்பதில்லை. இயேசுவின் வார்த்தைகள் உண்மையாகவும், வாழ்வுக்கு ஒளியாகவும் இருக்கின்றன. உலகம் தீர்ப்பிடும்போது சாட்சியம், தடயம், புள்ளிவிபரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பிடுகிறது. ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தலும் குற்றமற்றோர் தண்டனை பெறக் கூடாது என்ற எண்ணத்தோடு தீர்ப்பிடப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால் குற்றவாளிகள் பலர் சுதந்திரமாக இருக்கிறார்கள். அப்பாவிகளே தண்டனை பெறுகிறார்கள். காலஞ்சென்ற வழக்கு என்று சிலரை விடுதலை செய்யும் நீதிமன்றம் காலஞ்சென்ற நீதித் தீர்ப்பு பயனற்றது என்பதை ஏன் உணர்வதில்லை? ஆட்சியாளர் பலர் வழங்கும் தீர்ப்பு உண்மையில் நீதியானதா? மாந்தர்க்கு நேர்மையுடன் தீர்ப்பு வழங்குகின்றனரா? இல்லை; நாட்டில் நடக்கும் அநீதிக்கு உடந்தையாய் இருக்கிறார்கள் என்பது எத்தனை உண்மை? திருப்பாடல் ஆசிரியர் சொல்வது போல கடவுள் தன் தீர்ப்பினால் நீதியை வெளிப்படுத்தியுள்ளார். தண்டனைத் தீர்ப்பில் மாசற்றவராய் இருப்பினும் அவர் யாரையும் தீர்ப்பிடவில்லை. இயேசு தீர்ப்பிட அல்ல, மீட்கவே வந்தார். எனவே இயேசு சாட்சியம், தடயம், புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தாமல் பேரிரக்கத்தைப் பயன்படுத்துகிறார். நாமும்உலகப் போக்கின்படிதீர்ப்பிடாமல், இயேசுவைப் போல இரக்கம் காட்டுவோம்.

காவலன்

## கத்தோலிக்க ஆயர்களின் வருடாந்த மகாநாடுஇன்று

கத்தோலிக்க ஆயர்களின் வருடாந்த மகாநாடு இன்று கண்டியில் ஆரம்பமாகவுள்ளது.

இம்மகாநாடு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்கென யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள், சமாதானத்துக்கான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டுள்ள இத்தருணத்தில், அரசாங்கமும் யுத்த நிறுத்தத்தினை அறிவித்து பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டுமென கத்தோலிக்க ஆயர்கள் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றவுள்ளதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சி வெற்றி பெறுவதற்காக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் இணக்கப்பாடொன்றிற்கு வரவேண்டும் என்றும், நாட்டில் சமாதானம் ஏற்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இம்மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (செ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

[செம்பியன் பற்று]

யாழ் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை இல்லமெய்வல்லுநர் போட்டி கடந்த புதனன்று பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில், வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார் (உ-42)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்

நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# 36 ஊழியர்களின் வேலைநீக்கம்
# மனித நேயமற்ற செயலாகும்

## டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் கடந்த எட்டுவருடங்களாகக் கடமை யாற்றிய 36 சுகாதார ஊழியர்களை மாநகர சபை நிர்வாகம் வேலைநீக்கம்செய்தமை மாநகரசபையின் சட்டதிட்டங்களுக்குமுரணானதென்பதுடன் மனிதநேயமற்ற செயலாகும். இவ்வாறு யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ. தெய்வேந்திரன்வேலையிழந்த சுகாதார ஊழியர்களின் ஊர்வலம், உண்ணாவிரதம் குறித்து தனதுபிரிவிற்குட்பட்டவர்களின் விவகாரம் என்ற வகையில் வெளியிட்ட பொது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள

→ 2ஆம் பக்கம் பார்க்க

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்

மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1711)

## கிரனேற் வெடித்து சிப்பாய் பலி

[மட்டக்களப்பு]

மாங்கேணி இராணுவ முகாமில் தலறுதலாக கிரனேற் ஒன்று வெடித்ததால் இராணுவச்சிப்பாய் ஒருவர் பலியானார் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று அதிகாலைஇடம்பெற்றது. [ந]

# பெண்கள்மீதான பாலியல்வல்லுறவு உடன் நடவடிக்கை எடுக்குக

## அ.விநாயகமூர்த்தி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு குற்றத் தடுப்பு கிளர்ச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடற்படை, பொலிஸ் உத்தியோகத்தர் மீது உடன் நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித்தலைவரும் யாழ் மாவட்ட எம்பியுமான அ விநாயகமூர்த்தி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் என்று அநாவசியமாக பாதுகாப்புப் படையினரால் குற்றம் சுமத்தப்பட்டு இளம் குடும்பப் பெண்கள் பாலியல் சித்திர வதைக்குள்ளாக்கப் படுவது சகஜமான செயாலாகமாறி வருகிறது.

இந்த வகையில் தான் கடந்த மாதம் 19ம்திகதியும் இரு இளம் குடும்பப் பெண்கள்பாதுகாப்புபடையினரால் பாலியல் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## யாழ்ம நகர---

தான வீதி- மடம் வீதி - ஆஸ்பத்திரி வீதி - கண்டிவீதி வழியாக யாழ், செயலகத்தைச் சென்றடைந்து யாழ் அரச அதிபரிடம் மகஜர்கையளித்து விட்டு, கச்சேரி நல்லூர்வீதி றக்கா வீதி - கோவில் வீதி - பருத்தித்துறை வீதி வழியாக யாழ் மாநகர சபையைச் சென்றடைந்து சபையின்முன்றலில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக பாதிக்கப்பட்ட ஊழியர்களின்செயற்பாட்டுகுழு அறிவித்துள்ளது. (ம

## 36ஊழியர்---

கக் கடிதங்களை அனுப்பி வைத்தால் இத்தகைய உண்ணாவிரதம் ஊர்வலங்கள் இடம் பெறுவதைத் தடுப்பது கடினமானதே:

இவ்வாறு ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் [நிஷாந்தன்] விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச்செய்திக் குறிப்பில்அவர் மேலும் தெரிவிக்கையில், வேலையிழந்த ஊழியர்களின் சாத்வீகப் போராட்டத்திற்கு எமதுகட்சி நிச்சயம் ஆதரவை வழங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பதில்---

பாக விடயங்கள் வெளிவரத் தொடங்கியதை அடுத்துமாநகரசபையின்ஊழியர்கள்மத்தியில் கலகலப்பு எழுந்துள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ம

## மருமாதா சுரூபம்மடுவில்

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை வேண்டி தென்பகுதிக்கு பவனியாக எடுத்துச்செல்லப்பட்ட மடுமாதாவின் சுரூபம் மீண்டும் மடுவிற்குதிரும்பி உள்ளது. (ந-5,7)

## பஸ்தடம் புரண்டது 8பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து குருநாகலுக்கு தலயாத்திரை சென்ற பஸ் ஒன்று தடம் புரண்டதில் 8பெண்கள் படுகாயமடைந்தனர்.

குரு நாகல் மபேட்ஸ் கம கிறிஸ்தவ தேவாலயத்திற்கு செல்லும் வழியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

40 பயணிகளை ஏற்றிச் சென்ற இந்த பஸ்ஸின் முன் சக்கரம் ஒன்றின் காற்று வெளியேறியதால் பாதையோரத்தில் வாகனம் புரண்டது இதில் பயணம்செய்த 8பெண்கள் படுகாயமடைந்துள்ளதுடன் மேலும் சிலர்சிறுகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## சு. க. கட்சியின் அவசர கூட்டம்

(ஏப்ரல் 2)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் அவசர வேண்டுகோளுக்கு இணங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அவசர கூட்டம் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது:

இக் கூட்டத்தில் ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயம் பற்றியும், விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் பற்றியும் மற்றும் அதிமுக்கிய விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக அரசுதரப்பு செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இக்கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் என்றும் அத்தகவல் மேலும் தெரிவித்துள்ளது. ந-07

## வயலின் வித்துவான் காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல வயலின்வித்துவான் கலாபூசணம் வி. சண்முகானந்தம் தனது 77வது வயதில்காலமானார்:

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிறந்த வயலின் வித்துவானாக பணியாற்றிய இவர் பல வயலின் கலைஞர்கள் உருவாக அத்திவாரமாக இருந்துள்ளார்:

இசைக் கலையில் பற்பல விருதுகளையும், பரிசில்களையும் பெற்றதுடன் வயலின் இசையில் தனக்கென ஓர் தனியிடத்தை வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## உணவகங்களுக்கு சீல்வைப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் சுகாதாரசீர்கேடான இரு உணவகங்கள் சுகாதாரப்பகுதியினரின் திடீர் சோதனை நடவடிக்கையின் போது சீல்வைத்துப் பூட்டப்பட்டது.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் வருடாந்த ஆலய உற்சவத்தை ஒட்டி அப்பகுதியில் உள்ள உணவகங்கள் திடீர் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [ப]

05-04-2001 வியாழன் ஆரம்பமாகின்றது
திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
தவக்கால ஆற்றுகை

மனிதம் எமது பாடல்
மனிதம் எமது தேடல்

காவிய நாயகன்
( திருப்பாடுகளின் காட்சி )

காலம்! ஏப்ரல் 05, 06, 07, 08 - 2001
( வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு )
நேரம்: மாலை 6 - 15 மணி
இடம்: மன்ற அரங்கு
குறிப்பு: முதல் நாள் 05ஆம் திகதி மட்டும் பிரவேசம் இலவசம்
ஏனைய நாட்களுக்கு அனுமதி 10.00 ஆசனம் 20.00
★ நுழைவுச் சீட்டுக்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 2393
திருமறைக் கலாமன்றம்
(கி 1726)

விளம்பர அன்பளிப்பு
இ. ச. பேரம்பலம் சக நிறுவனம் 50, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
சானுகா நகை மாடம் 198H. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## குருநாகல்---

டைந்த 15பேரில் ஆறுபேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குஎடுத்துசெல்கையில் அதில் ஒருவர் அங்குமரணமானார் இவருடன்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 12ஆக உயர்ந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புத்தொடர்பாக எவரும் இதுவரை கைதுசெய்யப் படவில்லையாயினும் பொலிஸார்தீவிரவிசாரணையில் இறங்கியுள்ளனர். இது சம்மந்தமான மேலதிக விசாரணைக்கு வட மேல் மாகாணப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் தலைமையில் விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது:

இக்குண்டு வெடிப்பு சம்மந்தமான ஆரம்ப விசாரணையின் போது வெடித்த குண்டின் பாகங்கள் படையினர் பாவிக்கும் குண்டு வகையை ஒத்ததாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (வ)

## நியாயமான---

சுகாதார ஊழியர்களின் செயற்பாட்டுக் குழுவிற்கு கொழும்பிலிருந்து பக்ஸ்மூலம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது தங்களால் அனுப்பப்பட்ட கடிதம் நேற்றைய தினமேகிடைக்கப்பெற்றோம் தாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பான முக்கிய விடயங்கள், எமது அமைப்பின் மாநகர சபை உறுப்பினர்களால் நிர்வாகத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில்எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களை நிர்வாகம் நடைமுறைப்படுத்துகின்றதா என்பதை சரிவரத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு சிலகாலம் தேவைப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம

உள்ளத்தில் தன்னம்பிக்கையையும் குதூகலிப்பையும் அளிக்கக்கூடிய
கவர்ச்சிகரமான

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மகளிர், ஆடவர்,
குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்
புத்தாண்டை முன்னிட்டு மிகவும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

சுயானாஸ் அன் றெஸ்பொயின்ற்
23, 24A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1713)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.